மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு வேண்டுகோள். கேள்வி நேரத்தில் நீங்கள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தால் நான் 20 கேள்விகளை ஒரு மணி நேரத்தில் முடிக்க முடிவது இல்லை. எனவே உறுப்பினர்களும் சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும், அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும், என்ற நியதியைக் கடைப்பிடிக்கக் கேட்டுக் கொள்கிறேன்... கேள்வி கேளுங்கள்.

திரு. ஆ. கு. சினிவாசன்: அந்தப் பகுதிக்கு ஒரு மருத்துவமனையை உள் நோயாளிகளாக சிகிச்சை பெறும் அளவுக்கு அரசிடமிருந்து செயற் குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று மேலும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு பேசி இருக்கிற காரணத்தால் அது பற்றி துறையிடம் சொல்லி, தனியாக அந்த அதிகாரிகளை அனுப்பி நிச்சயமாக அது பற்றி ஆய்வு செய்யச் சொல்கிறேன் என்பதை மட்டும் உத்திரவாதமாகத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு எம். பூராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

64—

## பூம்புகாரில் கலங்கரை விளக்கம்

* 19150— திரு. எம். வீராசாமி

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி பூம்புகாரில் ஒரு கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை,

1993 அக்டோபர் 29]

திரு. எம், பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகாரில் மீன் பிடிக்கின்ற படகுகள் நிறைய உள்ளன, அங்கே அந்த படகுகள் வர வசதியாக கலங்கரை விளக்கம் அமைத்துத் தர வேண்டியது அவசியம் என்று வேண்டுகிறேன். ஆகவே அரசு வருகின்ற ஆண்டிலாவது அங்கே கலங்கரை விளக்கம் அமைத்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கலங்கரை விளக்கம் உள்ள இடங்கள் கடலூர் தென்னாற்காடு மாவட்டம், பாம்பன் இராமநாதபுரம் மாவட்டம், குளச்சல் கன்னியாகுமரி மாவட்டம் ஆகும். ஏறத்தாழ ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவு பகுதிகள் அத்தனையும் கடல் பகுதியாக கடலை ஒட்டி இருக்கின்றன, தமிழகத்திலே தான் ஆயிரம் கிலோ மீட்டர் கடல் பகுதிகள் இருக்கின்றன, ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதிலே கொண்டு மத்திய அரசுக்கு அது பரிந்துரை செய்யப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு, க. அர்ச்சுனன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

65—

மேட்டூர் ஆர். எஸ்.—லிருந்து மேச்சேரி எம். என். பட்டி வழியாக பேருந்து விடுதல்

* 20417— திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா, மேட்டூர் ஆர். எஸ்.—லிருந்து மேச்சேரி எம். என். பட்டி வழியாக ஒரு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு, கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,